# இயற்கைக்கு மேம்பட்டவைகள்

2



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# காகங்கள் அவன் பக்கத்தில் வந்து, அவனுக்கு பரிமாறின




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

173. ஒருசமயம் எலியா என்ற பெயருடைய ஒரு மனிதன் இருந்தான். கர்த்தர் அவனிடம், "நான் இந்த தேசத்தின்மேல் நியாயத்தீர்ப்பை அனுப்பப் போகும் அளவுக்கு, இந்த தேசம் மிகவும் பாவமுள்ளதாயிருக்கிறது. ஆனால் எலியாவே, நான் உனக்காக தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை ஏற்படுத்தப் போகிறேன்" என்றார்.

174. "கர்த்தாவே நீர் என்ன செய்யப் போகிறீர்?"

175. "நீ அங்கே மேலே போய், அதோ அங்கே அந்த மலையின் உச்சியிலுள்ள, கேரீத் என்ற சிறு குளத்தண்டையில் இரு."

176. எலியா வீதியினூடாக நடந்து சென்று, "நல்லது, இப்பொழுது, நான் மழைக்காக அழைப்பது வரையில், மழை பெய்யப் போவதில்லை. நான் அதோ அங்கே மேலே போய், அந்த மலையின் மேல் இருக்கப் (போகிறேன்)" என்றான்.

177. மழையில்லாமல் (வறட்சி) ஏற்பட்டபோது, அந்த ஜனங்கள் வீட்டிற்கு வந்து, "அங்கே மேலே தண்ணீர் இல்லாதிருக்கும் போது, அங்கே மேலே அந்த மலையின் உச்சியிலிருக்கிற அந்தச் சிறு பழைய நீரூற்றண்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்தப் பைத்தியக்கார பித்து கொள்ளி கிழவனைப் பாருங்கள்" என்று கூறிக்கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா. ஆனால் தேவனோ அதைத் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தார் (kept it running). அவர் அவ்வாறு செய்வதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆமாம், அவன் மேலே மலையின் உச்சியில் இருந்தான். "அந்தக் கிழவன் அங்கு மேலேயே காய்ந்து போய்விடுவான் என்று பந்தயம் கட்டுகிறேன்" என்றார்கள்.

178. இல்லை, இல்லை, இல்லை, அவன் அப்படியே... செய்து கொண்டிருந்தான். அவன் தேவனால் அருளப்பட்ட வழியை எடுத்துக்கொண்டான். தேவன், "நீ அங்கே மேலே போய், இரு, ஏனென்றால் உன்னைப் போஷிக்க நான் ஏற்கனவே காகங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்" என்றார்.

179. அவர்கள், "அந்தப் பரிதாபமான கிழட்டு பித்து கொள்ளி அங்கே மேலே இருந்து பட்டினி கிடந்து செத்து விடுவான்" என்று கூறினார்கள்.

180. நல்லது, அவனோ மிக நல்ல நிலையில் இருந்து கொண்டிருந்தான். இன்றிரவு இங்கேயிருக்கும் உங்களில் நிறைய பேர் - ஏராளமானோரைக் காட்டிலும் அவன் மிக நல்ல நிலையில் இருந்தான் என்று நான் பந்தயம் கட்டுகிறேன். அவனுக்கு சேவை செய்ய, அவனுக்குச் சில கறுப்பின வேலைக்காரர்கள் இருந்தார்கள். உங்களுக்கு அது இல்லை என்று நான் பந்தயம் கட்டுகிறேன். ஆம், ஐயா. காகங்கள் அவன் பக்கத்தில் வந்து, அவனுக்கு பரிமாறின. அது சரிதானா? அது சரியே. அவனுக்கு கறுப்பின சுமை தூக்குபவர்கள் இருந்தார்கள், உங்களில் பாதிபேருக்கு அது இல்லை. அவைகள், அந்தக் காகங்கள் அருகில் வந்து, அவனுக்குப் பணி புரிந்துவிட்டு, அவைகள் கடந்து சென்றன.

181. சமீபத்தில் ஏதோவொரு பிரசங்கியார், "பில்லி, அந்தக் காகங்கள் அந்த மனிதனுக்கு ஆகாரத்தைக் கொண்டு வந்தது என்று நீர் நம்புவதாகவா என்னிடம் சொல்ல வருகிறீர்?" என்று கேட்டார்.

182. அதற்கு நான், “அவ்வாறு தான் வேதாகமம் கூறுகிறது. நான் அதை விசுவாசிக்கிறேன்” என்றேன். ஆமாம்.

183. “நான் உம்மிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். இந்த உலகத்திலே அந்தக் காகங்களுக்கு எப்படி சான்ட்விச்சுகள் கிடைத்து, அதை எலியாவிடம் கொண்டு வந்தன?” என்று கேட்டார்.

184. நான், “எனக்குத் தெரியாது. ஒரே காரியம் என்னவென்றால்: காகங்களுக்கு அது கிடைத்து, அவை அதைக் கொண்டு வந்தன; எலியா அதைப் பெற்றுக்கொண்டான்; அதோடு அது முடிவுபெறுகிறது. இப்பொழுது சரியாக இதைப்போன்று, எது என்னை இவ்விதம் நடந்து கொள்ளச் செய்கிறது என்று என்னால் உம்மிடம் கூற முடியாது, எனக்குத் தெரிந்த ஒரே காரியம் என்னவென்றால்: தேவன் அதைப் போதித்திருக்கிறார்; வேதாகமம் அவ்வாறு கூறுகிறது; பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வந்தார்; நான் அதைப் பெற்றுக்கொண்டேன்; நான் அப்படியே ஒரு நல்ல நேரத்தை உடையவனாயிருக்கிறேன்” என்றேன்.

185. அது எப்படி வருகிறது என்று எனக்குத் தெரியாது. நான் அப்படியே... அது அப்படியே இங்கேயிருக்கிறது. அல்லேலூயா! எனக்குத் தெரியாது. தேவன் அவ்வாறு கூறியுள்ளார், எனவே நான் அப்படியே - நான் அப்படியே அதைப் புசிக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் அதைக் கொண்டு வருகிறார், நான், "ஆம், கர்த்தாவே" என்று கூறுகிறேன்.

186. "நல்லது, அவர்கள் உம்மை ஒரு பரிசுத்த உருளை என்று அழைக்கப் போகிறார்கள்."

187. "எனக்குக் கவலையில்லை, ஆண்டவரே. நான் அப்படியே அதை நேசிக்கிறேன். அது அப்படியே நன்றாக உள்ளது. நான் அப்படியே தொடர்ந்து புசித்துக்கொண்டே இருக்கிறேன். அதைக் கீழே அனுப்பும்." ஆமென். "அந்த இறைச்சி இடையீட்டு அப்பத்தில் (sandwich) ஒரு பெரிய கடியை எனக்குக் கொடும்." அவ்வளவு தான்.

188. அவர்கள், "ஓ, என்னே, ... கண்டுபிடிக்க முயற்சிக்கும்படியாக, அங்கே சுற்றிலும் வலைவீசித் தேடிக்கொண்டிருக்கிறோமே" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

189. அந்த வயதான பிரசங்கியோ அங்கே மேலே உட்கார்ந்து கொண்டிருந்தான், மத வெறியன் என்று கருதப்பட்ட அவன், ஒரு காரியத்தையும் குறித்து கவலைப்படாதவனாக உட்கார்ந்திருந்தான். பாருங்கள்? அவன் நாள் முழுவதும் அங்கே உட்கார்ந்திருந்து, "ஓ கர்த்தாவே, நான் உம்மை நேசிக்கிறேன். கர்த்தருக்கு துதி உண்டாவதாக. தேவனே, நான் உம்மைத் துதிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

190. காகமானது அருகில் வந்து, "எலியாவே, இங்கே இருக்கிறாயா" என்றது.

191. அவன் இந்த மகத்தான பெரிய இறைச்சி இடையீட்டு அப்பத்தை (சான்விச்) எடுத்துக்கொண்டு, "ஓ, என்னே" என்றான். அங்கே கீழே அந்த பேர்வழிகளோ தங்கள் பேச்சினாலே கோபத்தால் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தார்கள்... இவனோ அப்படியே சிற்றாற்றில் இறங்கி, அவனுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டுமோ அதைக் குடித்தான், இருப்பினும் அவன், "பைத்தியக்காரன் (crazy)" என்று அழைக்கப்பட்டான்.

192. அது அந்தவிதமாகத்தான் இருக்கிறது, சகோதரனே. நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிற காரணத்தினால், நாம் பைத்தியம் பிடித்தவர்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள். சகோதரனே, நாமோ தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பீறிட்டுப் பாய்கிற, ஒருபோதும் தீர்ந்துபோகாத நித்திய ஜீவத்தண்ணீர்களை உடைய ஒரு நீரூற்றிலிருந்து பருகிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, அதுவே தேவனால் அருளப்பட்ட வழியாக இருக்கிறது. நிச்சயமாக, அவ்வாறுதான்.

193. உங்கள் சபையில் சேர்ந்து, உங்கள் பிரசங்கியாரோடு கரங்களைக் குலுக்க முயற்சிக்க வேண்டாம். தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அல்லேலூயா! அதைச் செய்ய வேண்டிய வழி அதுதான், அதைச் செய்வதற்கு உங்களுக்காக தேவனால் அருளப்பட்ட பாதை அதுதான். நீங்கள் வெறுமனே விசுவாசிப்பீர்களானால், தப்பிக்கொள்ளும்படியாக, ஒவ்வொரு முறையும், அவர் ஒரு வழியை உண்டாக்குவார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஆம், ஐயா. அவர் எலியாவுக்காக தப்பிக்கொள்ளும்படியான ஒரு வழியை உண்டுபண்ணினார்.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)




LAJOS
SEGNER















# மார்லின் மன்றோவின் மரணத்தைக் குறித்த தரிசனம் நிறைவேறுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: வேறொருவரால் விளையும் பாதிப்பு, அக்டோபர் 13, 1962, பத்தி எண் 52-56

சில வாரங்களுக்கு முன்பு நான் மலைக்குச் சென்றிருந்தேன். நான் வீடு திரும்பும்போது நாங்கள் (நானும் என் குடும்பமும்) சிறிது இளைப்பாற அங்கு சென்றிருந்தோம். கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த வாரம் மீண்டும் அங்கு செல்வோம். அங்கு ஒரு இரவு நான் தரிசனம் கண்டேன். அந்த தரிசனத்தில் ஒரு அழகான பெண் ஓடுவதைக் கண்டேன். அவள் கையை இங்கு வைத்திருந்தாள். அவள் விழுந்து மரித்துப் போனாள். கர்த்தருடைய தூதன் என்னிடம், "இதை குறித்து நீ கேள்விப்படும்போது, அவள் தற்கொலை

செய்து கொண்டதாக அவர்கள் கூறுவார்கள். ஆனால் அவள் மாரடைப்பினால் இறந்தாள். இப்பொழுது ஏறக்குறைய 4.00 மணி. நீ 4 மணி என்று சொல்'' என்று சொல்லி, என்னை விட்டுப் போய்விட்டார்.

அந்த மாட்டு முகாமில் தங்கியிருந்த என் குடும்பத்தை (மாடு மேய்ப்பவர் தங்குமிடம், அங்கு தான் நாங்கள் புல்மேயும் மாடுகளை வளைத்து ஓட்டிக் கொண்டு வருவது வழக்கம்) நான் அப்பொழுது எழுப்பவில்லை. அவர்கள் காலை வரைக்கும் உறங்கும்படி விட்டுவிட்டு, அன்று காலை அவர்களிடம், "ஒரு அழகான பெண், மிகக் கவர்ச்சியுள்ளவள் மாரடைப்பினால் இறந்து விடுவாள்'' என்றேன். இரண்டு நாட்கள் கழித்து நாங்கள் சாலையில் சென்று கொண்டிருந்த போது, வானொலியில்,

குமாரி (அவள் பெயர் எனக்கு ஞாபகம் வரவில்லை) மன்ரோ, திருமதி மன்ரோ. அது அவள் நடிப்புக்காக வைத்துக் கொண்ட புனைப்பெயர் (stage name) வேறெதோ ஒன்று. அவள் இறந்து போனாள். அவள் தற்கொலை செய்து கொண்டதாக அவர்கள் கூறினர்.

நான் எவ்வளவு கூறினாலும் உபயோகமிராது. அவர்கள் அப்பொழுதும் அவள் தற்கொலை செய்து கொண்டதாகத் தான் கூறுவார்கள். ஆனால் அந்த பெண் தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவள் மாரடைப்பால் இறந்து போனாள். நீங்கள் கவனித்திருப்பீர்களானால், அவள் கை – தொலைபேசியின் அருகில் செல்ல முயன்றாள். தொலைபேசி அவள் கையிலிருந்தது. அவளுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. தூக்க மாத்திரைகள் அங்கிருந்ததாக அவர்கள் கூறினர். அவள்

அந்த மாத்திரைகளை ஒரு மாத காலமாக (பாருங்கள்) அல்லது அதற்கும் அதிகமாக உட்கொண்டு வந்திருக்கிறாள். அவள் மாரடைப்பினால் இறந்து போனாள். 4 மணி அடிக்க நான்கு அல்லது ஐந்து வினாடிகளுக்கு முன்பு அவள் இறந்து போனாள்.

அவளுடைய வாழ்க்கை வரலாற்றை ஒரு பத்திரிக்கையில் படித்தேன். அவள் எப்படி... அவள் முறை தவறிப் பிறந்தவள். அவள் தன் ஜீவனுக்காக பாத்திரங்களைக் கழுவினாள். அவளுடைய தாய் பைத்தியக்காரக் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தாள். அவள் ஆவல் கொண்டாள் (அவள் உலகிலேயே மிகச் சிறந்த உடலமைப்பை கொண்டிருந்தவள் என்று நினைக்கிறேன்) – பணத்தால் விலைக்கு வாங்க முடியாத ஏதோ ஒன்றைப் பெற அவள் விழைந்தாள். "ஓ,

அவளை நான் சந்தித்திருந்தால் நலமாயிருக்கும். அவளுடைய தேவை என்னவென்று எனக்குத் தெரியும்'' என்று எண்ணினேன். பார்த்தீர்களா?

ஒருக்கால் புகழ் பெற்ற, சிறந்த சபைகளின் அங்கத்தினர்கள் – எல்லா பளிங்கும் பகட்டும் கொண்ட ஹாலிவுட்... அவர்கள் அப்படிப்பட்டவர்களைக் கண்டுள்ளனர்... அவளைக் காட்டிலும் வித்தியாசமான வாழ்க்கை சபை அங்கத்தினர்கள் வாழவில்லை என்பதை அவள் கண்டாள். உங்கள் வாழ்க்கை மற்றவர்களில் பாதிப்பை உண்டாக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலின் வல்லமை ஜனங்களிடையே காணப்பட்ட, மற்றவர்கள் கிறிஸ்துவை தொங்கிக்கொண்டிருக்கும் ஏதோ ஒரு விக்கிரமாக காணாமல், அவர் பரிசுத்த ஆவியின் ரூபத்தில் இருக்கின்ற

ஜீவிக்கின்ற ஒன்றாக அவர், மனத்திருப்தியையும், சந்தோஷத்தையும் அளிக்கிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஓ, அந்த இளம் பெண் இவ்வுலகத்தை விட்டுப் போவதற்கு முன் நாம் மாத்திரம் அவளை சந்தித்திருந்தால்!

★★★★★

உங்களிடம் கூறவேண்டும் என்று தேவன் என்னிடம் எதையாகிலும் சொல்லுவாரானால், நான் அதைச் சொல்லி விடுவேன். நான் அதைக் கூறும் போது, அதை விசுவாசியுங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **தேவன் என்பவர் யார்?**, *ஆகஸ்டு 15, 1950*

---

**உங்களிடம் கூறவேண்டும் என்று தேவன் என்னிடம் எதையாகிலும் சொல்லுவாரானால், நான் அதைச் சொல்லி விடுவேன். நான் அதைக் கூறும் போது, அதை விசுவாசியுங்கள்.**

*29. இங்கே சமீபத்தில், ஒரு பெண்மணி ஜெப வரிசையில் வந்தாள். அவள் ஒரு துரிதமான வரிசையைக் கொண்டிருந்தாள். அவள்...?... மேல் நடந்து வந்து கொண்டிருந்தாள். அது ஒக்லஹோமாவிலுள்ள, டுல்சா என்று நம்புகிறேன். அவள் வரிசையினூடாக தன்னுடைய கக்கதண்டங்களின் மேல் நடந்து வந்து கொண்டிருந்தாள். நான்,*

“சகோதரியே, நான் தேவனுடைய ஊழியக்காரன் என்று நீ விசுவாசிப்பாயா?“ என்று கேட்டேன்.

அவள், “ஆம், ஐயா“ என்றாள்.

நான், “நீ அந்த இடத்துக்குச் சென்று, உன்னுடைய கக்கதண்டங்களை கீழே எறிந்து விட்டு நடந்து செல்“ என்றேன்.

அவளோ, “ஆனால், ஐயா, நான்-நான் இங்கே இரண்டு வருடங்களாக இந்த கக்கதண்டங்களின் மேல் இருந்து வருகிறேன்“ என்றாள்.

அதற்கு நான், “நீ அனேகமாக எப்போதுமே அவைகளின் மேல் தான் இருப்பாய்“ என்றேன். அவள் தொடர்ந்து போய் விட்டாள். அது முடிந்து விட்டது.

30. ஏறக்குறைய இருபது நிமிடங்கள் கழித்து, ஒரு சீமாட்டி

அதனூடாக வந்தார்கள், இரண்டு வாயில் காப்போன்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியிருந்தது. அப்போது ஆவியானவர் அவர்களை நோக்கி இழுப்பதை உணர்ந்தேன். அவர்கள் ஏறிட்டு பார்த்தார்கள், மேலும் அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள்.

நான், "அம்மா, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அவர்கள், "நீர் தேவனிடம் எதைக் கேட்டாலும், தேவன் அதைக் கொடுப்பார் என்று என்னுடைய முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்" என்றார்கள்.

நான், "(சற்று முன்பு அந்தப் பெண்ணிடம் கூறினது போன்று), அங்கே நடந்து சென்று, அந்த

கக்கதண்டங்களை தூர எறிந்து விட்டு செல்லுங்கள்“ என்றேன்.

நான் அப்படியே நின்றபடி அவர்களைக் கவனித்தேன். அவள் அங்கே நடந்து சென்றார்கள். அவர்கள் அவளுக்கு உதவி செய்ய வேண்டியிருந்தது, அவர்கள் பரிதாபமான வயது சென்ற சீமாட்டியாக இருந்தார்கள், அவர்கள் மிகவும் பலவீனமாக மெலிந்து காணப்பட்டார்கள். அவர்கள் அவ் விதமான ஒன்றைப் பற்றிப்பிடித்துக் கொண்டார்கள். உடனே அவர்களுடைய கக்கதண்டங்களை எடுத்து, கீழே எறிந்து விட்டு, கீழே அந்தக் கட்டிடத்தினூடாக, சென்று, சுற்றி சுற்றி வந்து கூச்சலிட்டு கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது, அவர்கள் அதைச் செய்யாதிருந்திருந்தால் என்னவாகி இருக்கும்? பாருங்கள், புரிகிறதா? முதலில் நான் அதை அறிந்திருக்க வேண்டியிருக்கிறது. நீங்கள் கீழ்ப்படிந்து, என்ன செய்ய வேண்டும் என்று உங்களிடம் கூறப்பட்டதோ அதைச் செய்யுங்கள்.

பிறகு அவள் காலூன்றி நின்று,
சுகமாக இருப்பதை உணர்ந்தாள்.
அவள் கைகளை உயர்த்தி தேவனைத்
துதிக்க ஆரம்பித்தாள்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

### செய்தி: விசுவாசமானது ஆறாவது புலனாகும்

Chatauqua, Ohio, USA
60-06-11E

---

**7.** ஒரு சமயம், ஒருவன் என்னிடம் வந்து என்னை குருடாக்கு பார்க்கலாம். நீர் தெய்வீக சுகமளித்தலை, பவுல் பிரசங்கித்த அதே பரிசுத்த ஆவியை நம்புகிறீர், "என்னை குருடாக்கு" என்றான்.

நான் கூறினேன், "என்னால் அதைச் செய்ய இயலாது.

ஏனென்றால் ஏற்கனவே நீ குருடாய் இருக்கிறாய்”. நான் மேலும், “உன் பிதாவாகிய பிசாசு நீண்ட காலத்துக்கு முன்பே அதை உனக்குச் செய்துவிட்டான். பாருங்கள். நீ.. நீ.. நீ.. நீ... ஏற்கனவே குருடாய் இருக்கிறாய்” என்றேன். அவன் குருடன் என்று வேதம் கூறுகின்றது. இந்த சுவிசேஷமானது யாருக்கு மறைக்கப்பட்டிருக்கிறதோ அவன் குருடனாயிருக்கிறான் என்று வேதம் கூறுகின்றது. ஆகவே தேவன் தங்களுக்கு அளித்த புலன்களை உபயோகப்படுத்தாதவர்கள் தான்

குருடர் ஆவர். அந்த புலனானது (விசுவாசம் – தமிழாக்கியோன்) உபயோகப்படுத்தப்பட்டால் மற்ற ஐம்புலன்களும் தோல்வியுற்றாலும் அது இரட்சிப்பின் புலனாகும். இந்த புலனால் மகத்தான காரியங்கள் நடப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இங்கே சில நாட்களுக்கு முன்பு என்னுடைய கூட்டங்களில் பிரசங்க மேடையின் மேல் ஒரு ஸ்திரி வந்தாள். அவளுக்கு சீழ்ப்புண் வயிறு (Ulcered Stomach) இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. பரிசுத்த ஆவியானவர் பேசத் துவங்கினார்.

என்னால் அவ்வாறே செய்ய முடியாது என்பதை அவள் அறிந்திருந்தாள் அவள் யாரென்பதும் எங்கிருந்து வருகிறவள் என்பதையும் கூறினார். அவளுக்கு சீழ்புண் வயிறாய் இருந்தது. பிறகு கடந்து செல்கையில் அது “கர்த்தர் உரைக்கிறதாவது, நீ சுகமாக்கப்பட்டாய்” என்றது. அவள் வீட்டிற்கு சென்றாள்.

8. அங்கு ஒரு ஸ்திரீ இருந்தாள் (ஒலி நாடாவில் காலி இடம் – ஆசி) பக்கத்து இடத்தைச் சேர்ந்தவள். சரியாக

ஜெபவரிசையில் நின்றாள். அங்கு வந்தபோது… அவளுக்கு தொண்டையில் சதை வளர்ச்சி இருந்தது. அப்பொழுது ஜெப வரிசையில் அவள் வரும்போது, அவள் யாரென்பதும், அவள் எங்கிருந்து வருபவள் என்பதையும் மற்ற எல்லாவற்றையும் அது (பரிசுத்த ஆவி – தமிழாக்கியோன்) கூறினது? அவள் ”அது சரியே” என்றாள்.

“கர்த்தர் உரைக்கிறதாவது, நீ சுகமடைந்தாய்” என்று கூறினது. ஆகவே இரு ஸ்திரீகளும் அன்றிரவே ஒன்றாகப் பெற்றுக்

கொண்டு சென்றார்கள். அவர்கள் எந்த வித்தியாசத்தையும் உணரவில்லை.

அதனிடம் (விசுவாசத்தினிடம் – தமிழாக்கியோன்) இவைகளால் (ஐம்புலன்களால் – தமிழாக்கியோன்) கிரியை செய்ய எதுவுமே இல்லை. நீ அப்புலன்களிலிருந்து தூரமாகச் செல்ல வேண்டும். நீ அதன் (ஐம்புலன்கள் – தமிழாக்கியோன்) மேல் சார்ந்திருக்கப் போகிறாய் என்றால் இதன் மேல் உன்னால் சார்ந்திருக்க முடியாது. ஏனென்றால் நீ பார்த்தல், ருசித்தல், உணர்தல்,

முகர்தல், கேட்டல் ஆகியவைகளால் உணரமுடியாத ஒரு சாட்சியாய் அது உள்ளது. அது வேறொரு புலன்.

9. என்ன நடந்தது என்பதை கவனியுங்கள். சுமார் இரண்டு வாரங்கள் கழித்து சீழ்ப்புண் வயிறை உடைய இப்பெண், சாப்பிட முயற்சித்தாள். அவள் மரிக்க விரும்பினாள். ஆனாலும் அவள் நிலைத்திருந்தாள் (விசுவாசத்தில் – தமிழாக்கியோன்) அவள் "இதைக் குறித்து இயற்கைக்கு மேம்பட்ட காரியம் ஏதோ இருக்கிறது? ஏனென்றால் அந்த மனிதன் தன்

ஜீவியத்திலே என்னைக் கண்டதே இல்லை. ஆனாலும் நான் யாரென்பதைக் கூறினார். அது தேவ காரியமாய் இருக்க வேண்டும். ஏனெனில் அது வேதத்துடன் பொருந்துகிறது" என்று கூறினாள். பாருங்கள்? இன்னுமாய் அவள் அம்மனிதனை நான் அறிவேன். அவர் பிரசங்கித்துக் கேட்டிருக்கிறேன், அவர் படிப்பறிவில்லாதவர். இக்காரியங்களைக் குறித்து அவருக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் இதைக் குறித்த எல்லாவற்றையுமே கூறிவிட்டார். அந்த மனிதன் "கர்த்தர்

உரைக்கிறதாவது” என்று கூறினார். அவர் தேவனுடைய ஊழியக்காரனாய் இருந்தால் – அவர் நினைத்த ஒன்றைக் கூறியிருக்கமாட்டார். நீ சுகமாக்கப்பட்டாய் என அவர் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் தான் பேசினார்” என்று கூறினாள்.

அவள் இன்னுமாய் நிலைத்திருந்தாள். அவளுடைய கணவன் ஒரு கிறிஸ்தவன். அவளுடைய பிள்ளைகள். ஆகவே, தொண்டையில் சதை வளர்ச்சியை உடைய அந்த ஸ்திரீயை, தன் சிநேகிதியை சந்திக்க அவள்

அடுத்த தெருவிற்குச் சென்றாள். அவளுக்கும் எவ்வித மாறுதலும் இல்லாதிருந்தது. ஆனால் இருவரும் தங்களுடைய இருதயத்தில் அது தேவன்தான் என்ற நோக்கத்தை உடையவர்களாய் இருந்தனர். எல்லாமே அதுவாகத்தான் இருந்தது.

**10.** ஒரு நாள் காலை பிள்ளைகள் பள்ளிக் கூடத்திற்குச் சென்றுவிட்டிருந்தனர். அவள் நின்றுக் கொண்டு பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள். அவளால் எதுவுமே உண்ண

முடியாதிருந்தது. ஏனெனில் அந்த சீழ்ப்புண் வயிறு வியாதியானது (Ulcer) அவளை எரித்து விட்டிருக்கும். அவள் பாத்திரங்களை கழுவிக்கொண்டு இருக்கையில் திடீரென்று குளுமையாக, “சில்லென்ற ஒரு உணர்வு வந்தது” என்று கூறினாள். மேலும் ”இது என்னவாயிருக்கும்? சில்லென்ற, குளுமையாக நல்லுணர்வு உண்டாயிற்றே’’ என்று எண்ணினவளாய் தொடர்ந்து பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்களில் உண்மையாகவே அவளுக்கு பசி எடுத்தது. ஆகவே அவள் மேஜை அருகே சென்று பிள்ளைகள் சிறிது உணவை பாத்திரத்தில் விட்டுவிட்டிருந்தனர். ஆகவே கரண்டியில் அந்த உணவை எடுத்து சிறிது சுவைத்து “நல்லது, இன்னும் சில நிமிடங்களில் எப்போதும் போல வாந்தி எடுத்துவிடுவேன்” என்று எண்ணி, எப்போதும் போல இருந்துவிட்டாள். முதலாவதாக காரியம் என்னவென்று உனக்குத் தெரியுமா? எல்லாம் சரியாகிவிட்டது. அவள் முற்றிலும்

சுகமாகிவிட்டாள். ஆகவே அவள் மறுபடியும் சென்று அதை சுவைத்தாள். எல்லாம் சரியாகிவிட்டிருந்தது. உண்மையாகவே அவளுக்கு ஒரு உணவு யூபிலிக் கொண்டாட்டம் போல ஆகிவிட்டது. அவள் அங்குச் சென்று இரண்டு முட்டைகளை அவித்து, ஒரு பெரிய பீங்கான் தட்டில் வைத்து, ஒரு கப் காபி தயாரித்து அவள் உண்மையாகவே சாப்பிட ஆரம்பித்தாள். சிறிது நேரமாக பாத்திரங்களைக் கழுவிக் கொண்டே இருந்தாள். பிறகு அவள் காலூன்றி நின்று, சுகமாக இருப்பதை உணர்ந்தாள். அவள்

கைகளை உயர்த்தி தேவனைத் துதிக்க ஆரம்பித்தாள். என்ன நேர்ந்தது என்பதை தன் சகோதரிக்கு தெரியப்படுத்த வீதியில் ஓடினாள்.

அவள் அங்கு சென்றடைந்தபோது தரையில் நடந்து அந்த துணியை வேகமாக உதறிக் கொண்டிருந்த அந்த சிறிய ஸ்திரீ இவளைப் பார்த்து “நல்லது, சகோதரியே என்ன ஆயிற்று?”,

”இதோ பார், அது என் கழுத்தை விட்டு அகன்றுவிட்டது. அதை என்னால் எங்குமே

காணமுடியவில்லை” என்று கூறினாள். அது போய்விட்டிருந்தது.

அது என்ன? “ஏனெனில் அவர்கள் முடியாது இல்லை” என்ற பதிலுக்கு காத்திராமல் தேவனுடைய வார்த்தையின் ஆறாவது புலனின் மேல் அவர்கள் இருவரும் சார்ந்திருந்தனர். அதற்கு பிறகு இரண்டு மாதங்கள் கழித்து அவர்கள் கூட்டங்களுக்கு வந்து தாங்கள் எப்படி சுகமாயினர் என்பதை எனக்கு காண்பித்தனர். அதுஎன்ன? அந்த ஆறாவது புலன், அவர்களை இரட்சித்து மீட்டெடுத்த வல்லமையின் புலன், நான்

ஜெபித்ததினால் அல்ல, அவர்கள் விசுவாசித்ததினால் தான். அதுதான். அதுதான் செய்தது.



# சகோ.பிரன்ஹாமுக்கு எதிர்த்து நின்ற வெறிபிடித்த மனிதன் கீழ்படுத்தப்படுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதினோராவது கட்டளை, பத்தி எண் 4

அன்பைக் குறித்ததான என்னுடைய சில அனுபவங்களைக் குறித்த ஒரு தனிப்பட்ட சாட்சியை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்: மக்கள் நினைப்பது போல என் வாழ்க்கை தெய்வத் திறனுடைய ஒன்றல்ல, அவ்வாறு இல்லை, அது அன்பு ஆகும், அது தான் முக்கியமான காரியமாகும், அது கிறிஸ்துவை நேசிப்பதாகும். அப்படி செய்யலாம் என்று கூறுவதல்ல, ஆனால் உங்கள் இருதயத்திலிருந்து அவரை அன்பு கூர்தல். தேவனுடைய அன்பின் பிரசன்னத்தில் மிகவும் கொடியதான பிசாசுகள் கீழ்ப்படுத்தப் பட்டதை நான் கண்டிருக்கிறேன். துஷ்ட மிருகங்கள் அப்படியே படுத்துக் கொள்வதை நான்

கண்டிருக்கிறேன். அன்பு பயத்தை புறம்பே தள்ளும்.

அந்த இரவில் ஓரிகானிலுள்ள போர்ட்லாண்டில், அந்த வெறிப்பிடித்த மனிதன் என்னை எதிர்த்து நின்று, என்மீது எச்சிலை துப்பி என்னை சபித்ததை இன்றிரவு இங்கிருக்கின்ற உங்களில் சிலருக்கு நினைவிருக்கலாம். அநேக மேய்ப்பர்கள் பிரசங்க மேடையிலிருந்து ஓடிவிட்டனர். அவர்கள் அவனிடம் அதிக பயம் கொண்டிருந்தனர். அங்கிருந்த சிலர், காவல் துறையினர் அழைக்கப்பட வேண்டுமென்றும், அந்த மனிதனை வலுக்கட்டாயமாக அடக்கி அவனைக் கயிற்றால் கட்டி மறுபடியும் அவனை சிறைக்குள் அடைக்க வேண்டும் என்று நினைத்தனர். நான் அந்த மனிதனை வெறுப்பதற்குப் பதிலாக அவனை நேசித்தேன். "அந்த பரிதாப மனிதன்

என்னைக் காயப்படுத்த வேண்டும் என்று விரும்பவில்லை.... அது அந்த மனிதனுக்குள்ளிருக்கும் பிசாசு, அந்த பிசாசு தான் என்னை காயப்படுத்த விரும்புகிறான்.'' “அந்த மனிதன் ஒரு நேசிக்கின்ற குடும்பத்தையுடையவனாக இருக்கலாம், ஒன்று சேர்ந்து உணவு சாப்பிட, மற்றும் ஒரு நல்ல குடிமகனாயிருக்க விரும்புகிறவனாக இருக்கலாம். ஆனால் அவனுக்குள்ளிருக்கும் பிசாசு தான் இதைச் செய்கிறது'' என்று நான் நினைத்தேன். நான், “பாவம், அந்த சகோதரன்!'' என்று நினைத்தேன். அவன் என்னிடமாக அருகில் வந்து, “நீ தேவனுடைய மனிதனா அல்லது இல்லையா என்று நான் உனக்கு காண்பிக்கப் போகிறேன்!'' என்று கூறினான். நல்லது, நான் ஒன்றுமே

கூறவில்லை. நான் அவனை நோக்கிப் பார்த்து கொண்டிருந்தேன், அவ்வளவு தான். அந்த இடம் மிகவும் அமைதியாக இருந்தது. அப்பொழுது அந்த மனிதன், “புல்லில் இருக்கும் பாம்பே!” என்றான். நான் ஒன்றுமே கூறவில்லை. ஆனால் இதை நினைவில் கொள்ளுங்கள், நான் பயப்படவேயில்லை. ஏனெனில் நான் அங்கே தேவனுடைய அன்பைக் கொண்டவனாக அவனைச் சந்தித்தேன். அப்பொழுது அவன் என்னைத் தாக்க தன் கைமுட்டியை உயர்த்தின போது, நான், “சாத்தானே, அந்த மனிதனை விட்டு வெளியே வா” என்றேன், அப்பொழுது அவன் சுற்றிச் சுழன்று முகங்குப்புற விழுந்து, என் பாதம் அப்படியே தரையிலே அசையாதபடிக்கு அவன் அதைப் பிடித்துக் கொண்டான். என் நண்பர்களே பயப்படாதேயுங்கள்,

அதற்குப் பதிலாக அன்பை செலுத்துங்கள். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள், நீ உரிமை கொண்டிருக்கிற நிலத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் நீ நிருபிக்கத்தக்கதாக பிசாசு உனக்குச் செய்வான், ஆனால் நீ தேவனை நேசிப்பாயானால் பயம் என்பதே உனக்கு இருக்காது, நீ எதை விசுவாசிக்கின்றாயோ அதன் பேரில் நிற்க முடியும், நீ தோற்கடிக்கப்படவே முடியாது.

★★★★★

# உங்களிலிருக்கிறவர் பெரியவர்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

அவர் பிழைத்திருக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை வாக்களிக்கின்றது. அவர் பிழைத்திருக்கிறபடியால் நீங்களும் பிழைத்திருக்கிறீர்கள். "நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். அதே கிரியைகள். ஆனால் அதிகமான கிரியைகளை செய்வீர்கள். ஏனெனில் "நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார். அவர் எல்லாவற்றின் மேலும் ஜெயங்கொண்டிருக்கிறார். அவர்தான் அன்று காற்றை நிறுத்தினார். அவர்தான் அந்த அணில்களை சிருஷ்டித்தார். அது இருமுறை சம்பவித்தது. சார்லி, ஒருமுறை அது நீங்கள் இருக்கும் இடத்தில் நிகழ்ந்தது. அடுத்த முறை சகோதரன் ஃபிரெட்டும் சகோதரன் பாக்ங்ஸூம் எங்களுடன் மலையின் மேல் இருந்த போது நிகழ்ந்தது.

இது ஜெர்மனியில் நிகழ்ந்தது. **அப்பொழுது என் ஒவ்வொரு பக்கத்திலும் பதினைந்து மந்திரவாதிகள்...** பில்லியும், சகோதரன் ஆர்கன்பிரைட்டும், என்னைக் காண அவர்களுக்கு அனுமதி தர மறுத்துவிட்ட காரணத்தால், அவர்கள், "இந்த கூடாரத்தைச் சிதறப் பண்ணப் போகிறோம்"

என்று சவால்விட்டனர். **அவர்கள் அங்கு அமர்ந்து கொண்டு, மந்திரங்களைச் சொல்லி, தங்கள் தெய்வத்தை [பிசாசை] அழைத்தனர். அப்பொழுது பலத்த புயல் காற்று வீசியது.** அந்த கூடாரத்தில் முப்பதாயிரம் அல்லது நாற்பதாயிரம் ஜெர்மானியர் அமர்ந்திருந்தனர். **கூடாரம் இப்படியாக மேலே உயர்ந்து, கீழே விழுந்தது.** அவர்கள் ஒரு பறவையின் சிறகை கத்தரியால் வெட்டி, அதை கூடாரத்துக்கு நேராக காண்பித்துக் கொண்டிருந்தனர். **அவர்கள் அங்கு அமர்ந்திருந்து, தங்கள் மந்திரங்களை ஓதி,** இந்த மூன்று பரிசுத்த வார்த்தைகளை, "**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஊ ஊ ஊ ஊ; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஊ ஊ ஊ**" என்பதாக ஓதிக் கொண்டிருந்தனர்.

**அப்பொழுது பலத்த புயல்காற்று தோன்றினது. ஆம், சாத்தான் வான**

**மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் தலைவன். அவர்கள் புயல் காற்றை வரவழைத்தனர்.** அந்த பெரிய கூடாரம் ஒரு நகர வீடு வரிசை (City block) அளவிற்கு அவ்வளவு பெரியதாயிருந்தது. கான்வஸ் (Canvas) துணியினால் அது தைக்கப்பட்டிருந்தது. **காற்று அதற்கடியில் புகுந்து அதை அப்படியே தூக்கியது. காற்றும் மின்னலும் சேர்ந்து அதை பறக்கச் செய்தது.** நானோ தொடர்ந்து பிரசங்கம் செய்து கொண்டேயிருந்தேன்.

அவர்கள் தங்கள் மந்திரங்களை ஓதி, அந்த மூன்று சிறிய பரிசுத்த வார்த்தைகளாகிய, '**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி**' என்பவைகளை இரு புறத்திலும் உச்சரித்துக் கொண்டேயிருந்தனர். **அவர்கள் வணங்கின நிலையில் இருந்தபோது, அவர்களைப் பிசாசுகள் சூழ்ந்து கொண்டிருப்பதை நான் கண்டேன்.** ஆனால் அது கட்டப்படவில்லை.

நான் சகோதரன் லௌஸ்டரிடம், "இதை நீங்கள் மொழி பெயர்க்க வேண்டாம்" என்று கூறி விட்டு,

"சகோதரன் ஆர்கன்பிரைட், ஜெபம் செய்து கொண்டிருங்கள்" என்றேன்.

**நான், "பிதாவாகிய தேவனே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நீர்தான் என்னை இங்கு அனுப்பினீர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெர்மானிய நாட்டில் காலடி வைத்தேன். ஏனெனில் நீர் என்னை இங்கு அனுப்பினீர்.** அந்த மேகத்திற்கு என் மீது எவ்வித அதிகாரமுமில்லை. ஏனெனில் நான் அபிஷேகம் பண்ணப்பட்டு, ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்காக இங்கு அனுப்பப்பட்டுள்ளேன். **இங்கிருந்து நீ புறப்பட்டுச் செல்ல இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன்" என்றேன்.**

**அப்பொழுது இடிகள் முழக்கமிட்டுக் கொண்டே, உருண்டோடிவிட்டன. சூரியன் பிரகாசிக்கத் தொடங்கினது. கூடாரமும்**

**அமைதி பெற்று தன் சுயநிலைக்கு வந்தது.**

**பத்து நிமிடங்களுக்குள் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் பிரசங்க பீடத்தை சுற்றிலும் வந்து, இரக்கத்திற்காக கெஞ்சி, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைக் காண விரும்பினர்.** ஏன்? "**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்**" பாருங்கள்?

"உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" இந்த துன்பம், துயரங்களைக் காணும்போது, ஓ, சகோதரனே, சகோதரியே, நமக்கு எவ்வித கவலையுமில்லை. **தேவன் மகத்துவமுள்ளவர். அவர் உங்களுக்குள் இருக்கிறார். நீங்கள் நம்புகின்றீர்களா?** (சபையோர் – "ஆமென்" என்கின்றனர் - ஆசி).

*செய்தி:* 63-11-10E *உங்களிலிருக்கிறவர்*

★★★★★

# 1937-ல் அமெரிக்காவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும், ஜனவரி 8, 1961, பத்தி எண் 137-143

1937ம் ஆண்டில் இவ்வூரில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது, மண்ணால் போடப்பட்ட தரையுள்ள இங்கேயிருந்த இந்த பழைய சபைக்கட்டிடமானது வெள்ள நீரினால் நிறைந்திருந்தபடியால், ஒரு இழுவைப் படகில் நாம் கட்டிடத்தின் கூரை வரையிலும் செல்லக்கூடிய அளவுக்கு இருந்தது. அன்றிரவில் நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவிட்டு எனது வேதாகமத்தை திறந்தபடி பிரசங்க பீடத்தில் வைத்துவிட்டு நான் வீடு திரும்பிய பிறகு, வெள்ளம்

ஏற்பட்டு, மேலே வரைக்கிலும் பெருகியது.

நான் வெள்ளம் வரும் என்று முன்னுரைத்திருந்தேன். "இங்கே இந்த ஸ்ப்ரிங் தெருவில் 22 அடி அளக்கப்படுவதைக் கண்டேன்" என்று நான் கூறினேன்.

ஜிம் வைஸ்ஹார்ட் என்ற வயதான சகோதரனும் ஏனையோரும் அதைக் குறித்து என்னைக் கேலி செய்தனர். சகோதரன் ஜார்ஜ் அவர்களே, அது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? அவர், "பில்லி, 1884ல் ஸ்ப்ரிங் தெருவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் ஆறு அங்குல உயரத்திற்குத்தான் தண்ணீர்

பெருகியது” என்று என்னிடம் கூறினார்.

ஆகாயத்திலிருந்து ஒரு மனிதன் இறங்கி வருவதையும், அவன் ஒரு அளவு கோலை எடுத்து, இருபத்திரண்டு அடி உயரத்தை ஸ்பிரிங் தெருவில் அளந்தான் என்பதை நான் கண்டேன்” என்று நான் அவரிடம் கூறினேன்.

“நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு விட்டீர்கள்” என்று அவர் பதிலளித்தார்.

“நான் உணர்ச்சிவசப்படவில்லை. அது கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் என்பதாக இருக்கிறது” என்று நான் கூறினேன்.

ஸ்பிரிங் தெருவில் வெள்ளம் எவ்வளவு அடி உயரத்துக்கு இருந்தது என்பதை அவர்களிடம் கேளுங்கள். மிகவும் சரியாக இருபத்திரண்டு அடி உயரத்துக்கு அது இருந்தது.

அன்றிரவில் நான் பிரசங்கித்து விட்டு வைத்துவிட்டு வந்த அந்த பழைய வேதாகமம் நான் வைத்து விட்டு வந்த அதே இடத்தில்... மழை பெய்ய ஆரம்பித்து, வெள்ளம் பெருக்கெடுத்தது, இப்பழைய சபையில் இருந்த இருக்கைகள், கட்டிடத்தின் கூரை வரையிலும் வெள்ளத்தில் உயர கொண்டு போகப்பட்டது, உள்ளே வெள்ள நீர் நிறைந்திருந்து எல்லாவற்றையும் மேலே கொண்டுபோய்விட்டது;

பிரசங்க பீடமானது மேலே போய் விட்டது. பிறகு அவைகள் கீழே வந்து விட்டன, ஒவ்வொரு இருக்கையும் அதன் அதன் இடத்தில் திரும்பி வந்து இறங்கி நின்று விட்டது. வெள்ள நீரினால் மேலே கொண்டுபோகப்பட்ட வேதாகமமும் திரும்ப அதனிடத்திற்கு வந்து எந்த அதிகாரத்தில் திறந்து வைக்கப்பட்டு அங்கே விடப்பட்டு இருந்ததோ, அதே அதிகாரம் திறந்து வைக்கப்பட்டு இருந்தது. இவ்வளவு தணணீர் பெருகியிருந்துங்கூட, இவ்வாறு நிகழ்ந்தது.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை."

# செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும், ஜனவரி 8, 1961, பத்தி எண் 137–143



1937–ல் சபைக் கட்டித்தின் கூரை வரையிலும் கொண்டு போகப்பட்ட பிரசங்க பீடம்



1930–களில் இருந்த பிரன்ஹாம் கூடாரம்

# 1937 –ல் ஏற்பட்ட வெள்ளக் காட்சிகள்

இந்த புகைப்படத்தில், அமெரிக்காவிலுள்ள ஜெபர்ஸன்வில் பட்டணத்தில் **1937–ல்** ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காட்டப்பட்டுள்ளது. புகைப்படத்தின் நடுவில் க்வாட்ராங்கிள் (The Quadrangle) என்ற பாலத்தை நீங்கள் காணலாம். பிரான்ஹாம் கூடாரத்தின் மேற்கூரை (மேலே வலது பக்கத்தில்) வட்டமிடப்பட்டு காட்டப்பட்டுள்ளது.


OHIO RIVER FLOOD CREST JAN 27, 1937 UPPER GAGE 57.1 VIEW LOOKING NORTH JEFFERSONVILLE, IND NO. 3


[2]





ஜெபர்ஸன்வில் பட்டணத்தில் ஏற்பட்ட வெள்ளம்
(மேலிருந்து எடுக்கப்பட்ட படம்)



January 27 marked the crest of the flood. We speak of 57.1 feet as the high water mark which was really 40 feet above normal river level. A high water mark of 22 feet was set at the corner of Court and Spring Streets, Jeffersonville.




**Spring Street looking south near the crest of the flood.**



**Corner of Spring and Court Avenue in Jeffersonville around the crest of the flood on January 27, 1937.**

**1937—ல் ஓஹியோ நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு**



ஜெபர்ஸன்வில், இந்தியானா




நியூ ஆல்பெனி, இந்தியானா – கிழக்கு ஸ்ப்ரிங் தெரு



லூயிவில், கென்டக்கி



சின்சின்னாட்டி, ஓஹியோ



ஃபிராங்க்போர்ட், கென்டக்கி – பிரிட்ஜ் தெரு



சின்சின்னாட்டி, ஓஹியோ – ஓஹியோ (Ohio Pattern Works)



இந்த படங்கள் எல்லாம் வெள்ளம் வடியத் தொடங்கிய பிறகு எடுக்கப்பட்டவை.

# ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் புற்று நோயிலிருந்து சுகமடைதல்



ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் புற்று நோயிலிருந்து சுகம் பெறுவதற்கு முன் மற்றும் சுகம் பெற்ற பிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: பதறல், செப்டம்பர் 1, 1963, பத்தி எண் 128-132

செஞ்சிலுவை சங்கத்தை நிறுவிய ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்பவரின் கொள்ளுப் பேத்தியின் பெயரும் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல். இந்தக் கொள்ளுப்பேத்தியின் புகைப்படத்தை நீங்கள் புத்தகத்தில் கண்டிருக்கிறீர்கள். புற்று நோய் அவளைத் தின்றுவிட்டிருந்தது. அவளுடைய எடை முப்பது பவுண்டு மாத்திரமே. அவளை ஆப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்திலுள்ள லண்டனுக்கு அழைத்து வந்தனர். அவள் பதறல் கொண்டிருந்தாள். சகோதரன் பாஸ்வர்த் "எங்களால் ஆப்பிரிக்காவிக்கு வர இயலாது" என அவளுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அவள் தன் தாதி (nurse) யைக் கொண்டு இவ்விதம் எழுதியிருந்தாள். "என்னால் அசைய முடியவில்லை. என்னால் முடியவில்லை." அந்த புகைப்படத்தை கண்டிருக்கிறீர்கள். நாங்கள் ஒரு

துண்டை மேல் வைத்து அந்த இடத்தை மறைத்து விட்டோம். ஒரு சிறு கயிறு மாத்திரமே அதைச் சுற்றிலும் புகைப்படத்தில் காணப்படுகிறது. அவளுடைய உடல் அரை நிர்வாணமாயிருந்தது. அதை அப்படியே புத்தகத்தில் பிரசுரித்தால் யாராவது எங்களை குற்றப்படுத்துவார் என்று எண்ணி சிறு துண்டை வைத்து அந்தப் பாகத்தை மறைத்து விட்டோம். அவளுடைய இடுப்பைச் சுற்றிலும் ஒரு கந்தை துணி, அல்லது துவாலை, உண்டாயிருந்தது. இடுப்பிற்கு மேல் ஒன்றுமேயில்லை. எனவே ஒரு காகிதத் துண்டை அந்தப் புகைப்படத்தின் மேல் வைத்து, அந்த பாகத்தை மறைத்து விட்டு மறுபடியும் புகைப்படம் எடுத்து அதைப் பிரசுரிக்கத் தீர்மாதானித்தோம். ஏனெனில், அந்த புகைப்படத்தை அப்படியே புத்தகத்தில் வெளியிட்டிருந்தால், சரியான விதத்தில் ஆலோசிக்க முடியாதவர்கள் என் மீது குற்றம் கண்டுபிடித்திருப்பார்கள்.

அவளை எக்காரணத்தைக் கொண்டும் அசைக்கக் கூடாது என்று மருத்துவர் கூறியிருந்தார். நான் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யப் போகின்றேன் என்று அவள் கேள்விப்

பட்டவுடனே, அவளை ஒரு ஸ்ட்ரெட்சரில் படுக்க வைத்து, விமான மார்க்கமாக லண்டனுக்கு கொண்டு வந்தனர். அங்கிருந்து பக்கிங்காம் அரண்மனைக்கு அவளைக் கொண்டு செல்ல ஒரு காப்பாளன் (Guard) விமான நிலையத்திற்கு வந்திருந்தான். அவளுக்காக ஜெபம் செய்ய வரும்படி என்னிடமும் காப்பாளன் ஒருவனை அனுப்பிருந்தனர். அவள் பேசவும் முடியாதபடிக்கு அவ்வளவு மோசமான நிலையில் இருந்தாள். அவளுடைய கை என் கையைப் பிடித்துக்கொள்ள யாராவது ஒருவர் அதை தூக்கிவிட வேண்டியதாயிருந்தது.

லண்டன் எப்படியென்று உங்களுக்குத் தெரியும். இராணுவத்தில் பணிபுரிந்த உங்களில் சிலர் அங்கு சென்றிருக்கிறீர்கள். அது எப்பொழுதும் பனியால் மூடப்பட்டிருக்கும். நான் ஜன்னல் பக்கம் முழங்காற்படியிட்டு.... அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.... கண்ணீர் சிந்த போதுமான ஈரப்பசை எவ்விதம் உண்டாயிருந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அவள் சருமம் மூடப்பட்ட எலும்புக்கூடாய் காட்சியளித்தாள். அவள் கால்கள் இடுப்பில்

சரியாக பொருந்தவில்லை. இரண்டு மூன்று அங்குலம் இடைவெளி உள்ளது போல் தோன்றினது. அவளுடைய இரத்தக் குழாய்கள் முழுவதும் சுருங்கிப் போய் இயங்காமலே இருந்தன. அவள் எப்படித்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாளோ என்று எனக்குத் தெரியவில்லை. அவள் சுகம் பெற்ற பின்பு எடுத்த புகைப்படத்தையும் நீங்கள் கண்டிருக்கிறீர்கள்.

அவள் படுக்கையினருகில் நான் முழங்காற்படியிட்டேன். அவள் பதறும் நிலையில் இருந்தாள். என்னால் வரமுடிந்தாலும் முடியாவிட்டாலும், அவளை எப்படியாயினும் கொண்டு வரத்தீர்மானித்திருந்தனர்.

நான் அங்கு சென்றேன், மரிக்கும் தருவாயிலிருந்த அந்த ஏழை சிறுமியின் விசுவாசத்தைக் கண்டபோது, என் மனம் நொந்தது. என்னால் இயன்றவரை, என் முழு இருதயத்தோடும் அவளுக்காக ஜெபித்தேன். நான் ஜெபம் செய்யத் தொடங்கிய போது, ஒரு வெண்புறா பறந்து ஜன்னலின் வழியாக உள்ளே வந்து கூவிக் கொண்டே இங்குமங்கும் நடந்து

கொண்டிருந்தது. அது யாரோ வளர்க்கும் புறா என்று எண்ணியிருந்தேன். நான் இங்கிலாந்தையடைந்து ஒரு மணி நேரம் கூட அப்பொழுது ஆகவில்லை; விமான நிலையத்திலிருந்து நேரடியாக அங்கு சென்று விட்டேன். அது வளர்க்கும் புறா என்று எண்ணினேன். நான் ஜெபத்தை முடித்துக் கொண்டு எழுந்து "ஆமென்" என்று சொன்ன போது அது பறந்து சென்று விட்டது. அந்த புறாவின் சத்தத்தைக் கேட்டார்களா என்று அங்குள்ள சகோதரர்களிடம் வினவினேன். அவர்களும் அதைக் குறித்துதான் அப்பொழுது பேசிக் கொண்டிருந்தனர். "அந்த புறா வந்ததன் அர்த்தம் என்னவென்று தெரியுமா? என்று நான் கேட்க ஆரம்பித்தபோதே, "**கர்த்தர் உரைக்கிறதாவது**, நீ உயிர் வாழ்வாய், சாக மாட்டாய்" என்னும் வாக்குத்தத்தம் என்னில் தோன்றியது. அவள் இன்றைக்கும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் ஏன்? பதறல். அந்தப் பதறல் அவளைத் தீர்மானம் கொள்ளச் செய்தது - உயிர் வாழ்வது அல்லது மடிவது என்று. நான் அங்கு அடைந்த அதே சமயத்தில் அவளும் வந்து சேர பதறல் ஒழுங்கு செய்தது. தேவன் அடையாளமாக

வெண்புறா ஒன்றை அனுப்பி, “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்னும் வாக்குத்தத்தத்தை அருளினார் - பதறல்

★★★★★





**நீங்கள் எல்லாரும் சுகமடைய வேண்டும் என்பது தான் அவருடைய சித்தமாக இருக்கிறது.**

**"நீ எல்லாவற்றிலும் (எல்லாவற்றிலும்) வாழ்ந்து சுகமாயிருக்கும்படி விரும்புகிறேன்"** என்று வேதாகமம் கூறுகிறது. **நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார்.** நீங்கள் அவரை விசுவாசிப்பீர்களானால், அவர் உங்களுக்கு சுகத்தைக் கொடுப்பார் என்பதை நான்-நான் அறிவேன்.

**செய்தி: யேகோவா-யீரே**, ஆகஸ்டு 17, 1955, பத்தி எண் 26

Rev William Branham

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*



சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in